# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 76/மா/2022**
**நாள் : 13.09.2022**

திரு. T.செந்தமிழன்,
வேலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

வேலூர் மாவட்டம், காட்பாடி, வள்ளிமலை ரோடு, வி.டி.கே.நகர், கதவு எண்.25ல் வசிக்கும் திரு. T.செந்தமிழன் என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2022-ல் பெறப்பட்டு 76/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், காட்பாடி, வள்ளிமலை ரோடு, வி.டி.கே.நகர், கதவு எண்.25ல் வசிக்கும் திரு. T.செந்தமிழன் என்பவர் தனது முறையீட்டு மனுவில்,

"வேலூர் மாநகராட்சி, மண்டலம்–1, வார்டு எண் 3, (2011–2016 வரை 4வது வார்டு) வி.டி.கே.நகர் பகுதியில் மாநகராட்சி நிர்வாகம் இரண்டு கழிப்பறைகள், மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம், சமுதாயக்கூடம், சாலைப்பணிகள் ஆகியவை மேற்கொண்டுள்ளது. ஆனால் இந்த திட்டப் பணிகளை செய்வதற்கு முன்னால் எந்தவிதமான முன்னறிவிப்பு பலகைகளும் அந்தப் பகுதியில் வைக்கப்படவில்லை. மேலும் ஒரு கழிப்பறை 19 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. ஆனால் அதில் ஒரு நாள் கூட தண்ணீர் வரவில்லை. மேலும் அந்த கழிப்பறை ஏரிநீர்நிலை புறம்போக்கு பகுதியில் கட்டப்பட்டுள்ளது. அதனால் கடந்த ஆண்டு பெய்த மழையில் வெள்ளநீர் சூழ்ந்தது. நீர்நிலை புறம்போக்கு பகுதியில் மாநகராட்சி நிர்வாகத்தினர் எவ்வாறு கழிப்பறை கட்டமுடியும் என்று தெரியவில்லை. மேலும் அதற்கு அனுமதி அளித்த அதிகாரியின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இந்த பகுதியின் பக்கத்து தெருவிலேயே ஒரு கழிப்பறை உள்ளது. அவ்வாறு இருக்க இந்த

கழிப்பறை ஏன் கட்டப்பட்டது என்று புரியவில்லை. பக்கத்து தெருவில் இருக்கும் கழிப்பறையும் செயல்படுவதில்லை. ஆனால் பராமரிப்பு பணிகளுக்கான பணம் செலவிடப்படுவதாக (ரூ.3 இலட்சம்) கழிப்பறையின் முன்னால் எழுதப்பட்டுள்ளது. மேலும் கழிப்பறையை சுற்றியுள்ள பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த கழிப்பறை அரசின் புறம்போக்கு இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டதா? அல்லது ஒப்பந்ததாரர் பணம் சம்பாதிப்பதற்காக கட்டப்பட்டதா ? என்று தெரியவில்லை.

இந்த கழிப்பறையை மாநகராட்சி நிர்வாகம் கட்டியுள்ளதால் அரசுக்கு ரூ.19 இலட்சம் வீணான செலவு ஏற்பட்டுள்ளது. அரசியல் பின்புலம் உள்ளவர்களுக்கு சாதகமாக மாநகராட்சி நிர்வாகம் செயல்பட்டுள்ளது. அதனால் மக்களின் வரிப்பணம் வீணாகியுள்ளது மற்றும் நீர்நிலை புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த கழிப்பறையில் மோட்டார் காணாமல் போய்விட்டது என்றும் மாநகராட்சி நிர்வாகம் தெரிவிக்கின்றது.

மேலும் இந்தப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் கட்டிடப் பணிகள், பராமரிப்பு பணிகள், சாலைப்பணிகள் போன்றவற்றிற்கு, திட்டமதிப்பீடு, ஒப்பந்ததாரர் விவரம், டெண்டர் விடப்பட்ட தேதி, பணி முடிக்கப்பட்ட தேதி, பணியின் மேற்பார்வையிடும் அதிகாரியின் பெயர் கொண்ட எந்த முன்னறிவிப்பு பலகைகளும் வைக்கப்படவில்லை. நிர்வாகத்தில் எந்தவிதமான வெளிப்படைத் தன்மையும் இல்லை. எனவே இது குறித்து தாங்கள் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2.மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர் தனது 29.6.2022 நாளிட்ட அறிக்கையில்**

"வேலூர், மாநகராட்சியுடன் 2011–ல் இணைக்கப்பட்ட பகுதிகளில், உட்கட்டமைப்பு இடைநிரப்பு நிதி திட்டம் (IGFF) மூலம் புதிய கழிப்பிடங்கள் அமைத்தல் பணிக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் மாநகராட்சி அனைத்து வார்டு பகுதிகளிலும் கழிப்பிடங்கள் இல்லாத பகுதிகளை தேர்வு செய்து, அப்பகுதி மாமன்ற உறுப்பினரின் கோரிக்கைகளை பெற்று புதிய கழிப்பிடங்கள் கட்ட மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, வார்டு எண். 3 காட்பாடி வி டி கே நகர் பகுதியில், அரசுக்கு சொந்தமான இடத்தில் பொது கழிப்பிடம் கட்டப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. நீர்நிலை புறம்போக்கு பகுதியில் மேற்படி கழிப்பிடம் அமைக்கப்படவில்லை. அப்பகுதியில் சமூக விரோதிகளால் அவ்வப்போது மின்கம்பிகளையும் மோட்டார்களையும் திருடி செல்வதுடன் கழிப்பிடத்தையும் சேதப்படுத்தி வருகிறார்கள். இதனை மாநகராட்சியால் அவ்வப்போது சீரமைத்து, பொதுமக்கள் கடந்த 10 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறார்கள். மேலும் பணிகள் தொடர்பாக கழிப்பிட கட்டிடத்தில் கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன் என்றும்

மேலும் மாநகராட்சியால் செயல்படுத்தப்படும் பணிகளின் விவரம் அப்பகுதியில் அறிவிப்பு பலகைகள் மூலம் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 01.09.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

**4) மனுதாரர் 01.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

வேலூர் மாநகராட்சி 3வது வார்டு வி. டி. கே. நகர் பகுதியில் மாநகராட்சியால் புதிதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறைகளில் நீர் வசதி இல்லாமல் கழிப்பறையை பொதுமக்கள் பயன்படுத்தாத நிலை ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பறை நீர்நிலைப் புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ளதால், மழைக்காலங்களில் அங்கு நீர் சூழ்ந்து காணப்படுகிறது. மேற்கண்ட கழிப்பறை அமைந்துள்ள இடத்திற்கு அருகிலேயே ஏற்கனவே கட்டப்பட்ட கழிப்பறைகள் இருந்து வருவதால் புதிதாக கழிப்பறைகளை ஏன் கட்டினார்கள் என்று தெரியவில்லை. எனவே, ரூபாய் 19 லட்சத்தில் கட்டப்பட்ட மேற்கண்ட கழிவறை தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் பொதுமக்களின் பயன்பாட்டில் இல்லாத நிலையில், இதற்குக் காரணமான அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று மேற்கண்ட கழிப்பறை நீர்நிலை புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ளது என்பதையும் மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெறும் திட்டப் பணிகளின் விவரங்கள் குறித்த பதாகைள் பணிகள் நடைபெறும் இடத்தில் வைக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

**5) 01.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் வேலூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பழைய கழிப்பறை வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்படுவதற்கு முன்னர் கட்டப்பட்டதாகும். இதில் ஆண் பெண் இருபாலருக்கும் தலா 3 கழிவறைகள் மற்றும் 2 குளியலறைகள் இருந்துள்ளன. மேற்கண்ட கழிப்பறைகள் சிறியதாகவும், வீடுகளுக்கு அருகிலும் அமைந்திருந்ததால், ஒதுக்குப்புறத்தில் புதிய கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன. ஊருக்கு ஒதுக்குபுறமாக மேற்கண்ட கழிவறைகள் அமைந்துள்ளதால், கழிப்பறையில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டார், பைப் மற்றும் மின்சாதனப் பொருட்கள் சமூக விரோதிகளால் அடிக்கடி களவாடப்பட்ட நிலையில் மேற்கண்ட கழிப்பறையை பொதுமக்கள் பயன்படுத்தாத நிலை ஏற்பட்டது.

மேற்கண்ட புதிய கழிவறைகளில் தற்போது மோட்டார் ரிப்பேர் செய்யப்பட்டு, தண்ணீரை பயன்படுத்தி, பொதுமக்கள் கழிவறைகளை பயன்படுத்தி வருகின்றனர். மேலும், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கண்ட கழிவறைகளை பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில்

தெரிவித்துக் கொள்கிறேன். மனுதாரர் குறிப்பிட்டவாறு மேற்கண்ட கழிவறைகள் பொதுமக்கள் திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்துவதைத் தவிர்த்திட வேண்டி வீடுகள் அமைந்துள்ள இடத்திலிருந்து நீர்நிலை புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ள மயானம் செல்லும் வழியில் அமைந்துள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். புதிதாக அமைந்துள்ள கழிப்பிடம் தொடர்பாக புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் வேலூர் மாநகராட்சி ஆணையர் கடிதம் நாள் 30.8.2022ல் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளனர்

**6) வேலூர் மாநகராட்சி ஆணையர் தனது 30.8.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**

“வேலூர் மாநகராட்சியுடன் 2011ல் இணைக்கப்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு இடை நிரப்பு நிதி திட்டம் (IGFF) மூலம் புதிய கழிப்பிடங்கள் அமைத்தல் பணிக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனப்படையில் மாநகராட்சி அனைத்து பகுதிகளிலும் போதுமான கழிப்பிடங்கள் இல்லாத பகுதிகளை தேர்வு செய்து அப்பகுதி மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை பெற்று புதிய கட்டிடங்கள் கட்ட மாமன்றத்தில் அனுமதி பெறப்பட்டு வார்டு எண். 3 வி.டி.கே நகர் பகுதியில் மயானம் செல்லும் சாலையின் இடதுபுறத்தில் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இதன் அருகில் 250 மீட்டர் தொலைவில் ஏற்கனவே ஒரு கழிப்பறை உள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்த பழைய கழிப்பறை மாநகராட்சியுடன் இணைக்கப்படும் முன்னர் கட்டப்பட்டதாகும். இதில் ஆண் பெண் இருவருக்கும் தலா 3 கழிவறைகள் மற்றும் 2 குளியலறைகள் இருந்தது. மேலும் இந்த கழிப்பறை வீடுகளின் அருகில் அமைந்திருந்தது. இந்த கழிவறை சிறிதாக இருந்ததால் புதிய கழிப்பறைகள் அப்பகுதியில் மயானம் செல்லும் சிமெண்ட் சாலையின் இடது புறத்தில் குடியிருப்புகளில் இருந்து தள்ளி கட்டப்பட்டு உள்ளது. இப்பகுதி ஆள் பராமரிப்பு இல்லாததால் அவ்வப்போது சேதமும் களவும் இருந்து வந்துள்ளது. இதனால் கழிவறையின் பயன்பாட்டில் தொய்வு ஏற்பட்டது.

இப்பகுதியில் 4 தெருக்களில் 76 வீடுகள் அமைந்துள்ளது. இதில் 334 நபர்கள் வசிக்கின்றனர். இவற்றில் 33 வீடுகளில் மட்டும் தற்போது கழிவறை வசதி இல்லாததால் இவர்கள் பயன்பெறும் வண்ணம் தற்போது இந்த மயான பகுதியின் அருகில் உள்ள கழிவறை சீரமைக்கப்பட்டு குழாய்கள் அமைக்கப்பட்டும் பல்புகள் பொருத்தப்பட்டும் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. இதில் ஆண் பெண் இருவருக்கும் தலா 7 கழிவறை மற்றும் 2 குளியலறை உள்ளது. மேலும் இக்கழிவறையின் தொடர் பயன்பாட்டை உறுதி செய்ய ஏதுவாக இந்தக் கழிவறையை அந்தப்பகுதியில் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் நடத்திட தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதில் செம்பருத்தி எனும் சுய உதவி குழு மேற்கண்ட கழிவறையை நடத்திட முன்வந்துள்ளது. இனிவரும் காலங்களில் இந்த கழிவறையின் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்ய உரிய

கண்காணிப்பு செய்யப்படும். மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு மாநகராட்சி பகுதிகளில் நடைபெறும் திட்டப்பணிகளின் விவரம் குறித்த பதாகைகள் பணிகள் நடைபெறும் இடத்தில் வைக்கப்பட்டுள்ளது " என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

"மனுதாரர் நீர்நிலை புறம்போக்கு இடத்தில் புதியதாக ஒரு கழிப்பறையை, ஏற்கனவே அருகில் ஒரு கழிப்பறை இருந்தும், ரூபாய் 19 லட்சத்தில் கட்டப்பட்ட கழிவறை தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் பொதுமக்களின் பயன்பாட்டில் இல்லாத நிலையில் இதற்கு காரணமாக இருந்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாநகராட்சி பகுதிகளில் நடைபெறும் திட்டப்பணிகளின் விவரங்கள் குறித்த பதாகைகள் பணிகள் நடைபெறும் இடத்தில் வைக்கப்படுவதில்லை எனவும் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பழைய கழிப்பறை வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்படுவதற்கு முன்னால் கட்டப்பட்டுள்ளது. இதில் ஆண் பெண் இருபாலாருக்கும் தலா 3 கழிவறைகள் மற்றும் 2 குளியலறைகள் இருந்துள்ளதாலும் அந்த கழிப்பறைகள் சிறியதாகவும் வீடுகளுக்கு அருகில் அமைந்துள்ளதாலும் நீர்நிலை புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ள மயானம் செல்லும் வழியில் ஆண் பெண் இருபாலருக்கும் தலா 7 கழிவறை மற்றும் 2 குளியலறையுடன் புதிதாக கட்டப்பட்டுள்ளது. ஊருக்கு ஒதுக்குபுறமாக அமைந்துள்ளதால் அக்கழிப்பறையில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டார், பைப் மற்றும் மின்சாதனப் பொருட்கள் சமூக விரோதிகளால் அடிக்கடி களவாடப்பட்ட நிலையில், மேற்கண்ட கழிப்பறை பொதுமக்கள் பயன்படுத்தாத நிலை இருந்ததை ஆணையரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது. ஏற்கனவே இருந்து வந்துள்ள கழிப்பறைக்கு தண்ணீர் வசதி இல்லை என்று மனுதாரர் கூறியுள்ளதை சாதரணமாக புறந்தள்ள இயலாது. மக்களுக்கு அடிப்படை வசதிகள் அரசு ஏற்படுத்தி கொடுத்தும் அதனை சரிவர பராமரிக்க மாநகராட்சி அலுவலர்கள் தவறியுள்ளனர். மேலும் அடிக்கடி சமூக விரோதிகளால் மேற்கண்ட பைப் மற்றும் மின்சாதனப்பொருட்கள் களவாடப்பட்ட நிலையில் அது குறித்து காவல்துறை மூலம் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்டிருந்தால் இந்த நிலை வரவாய்ப்பில்லை.

வேலூர் மாநகராட்சியின் சுகாதார அலுவலர்கள் தங்கள் களப்பணியை சரிவர செய்து இருந்தால் இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எழவாய்ப்பில்லை. இது மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய போக்கையும் கடமை தவறிய செயலையும் காண்பிக்கிறது. இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது. தகுந்த நடவடிக்கை எடுக்காமல் இருந்த சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது நடைமுறையிலுள்ள உரிய சட்ட விதிகளின்படி

துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ஆணையர் தனது 29.6.2022 நாளிட்ட அறிக்கையில் நீர்நிலை புறம்போக்கு பகுதியில் கழிப்பிடம் அமைக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆணையர் மற்றும் உதவி ஆணையர் இருவரும் 1.9.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் நீர்நிலை புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ள மயானம் செல்லும் வழியில் கழிவறை அமைந்துள்ளது என தெரிவித்துள்ளனர். ஆனால் மனுதாரர் அக்கழிப்பறை நீர்நிலை புறம்போக்கு இடத்தில் அமைந்துள்ளது என தெரிவித்துள்ளார். ஆதலால் புதிதாக கட்டப்பட்ட கழிப்பறை நீர்நிலை புறம்போக்கு இடத்திலா அல்லது அரசு புறம்போக்கு இடத்தில் கட்டப்பட்டுள்ளதா என்று ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. எனவே கண்காணிப்பு பொறியாளர் நிலையில் ஒருவரை நியமித்து இது தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ள செய்து அவரது அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கண்ட கழிவறைகளை பராமரித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தங்களது வாக்கு மூலத்தில் ஆணையர் மற்றும் உதவி ஆணையர் தெரிவித்துள்ளவாறு கழிவறைகளை பராமரிக்க தக்க நடவடிக்கையினை விரைவில் எடுக்கவும், இலவசமாக பொது மக்கள் பயன்படுத்திடவும் மற்றும் சுகாதாரமான முறையில் பராமரிக்கப்படுகிறதா என்பதை சுகாதார ஆய்வாளர்கள் அடிக்கடி ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், சுய உதவிகுழுவின் மூலம் அக்கழிப்பறைகள் சரியாக பராமரிக்கப்படுகின்றதா என்பதை அவ்வப்போது உறுதி செய்திட வேண்டுமாய் வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் உத்திரவிடுகிறது.

The Forum directs the Commissioner, Vellore Corporation to launch disciplinary action against the Assistant Commissioner, Sanitary staff concerned and the field level officials who were indifferent to this pathetic state of affairs in the maintenance of the public toilets.

But for this petition, the Corporation would not have restored a motor replacement to pump water for use in the complex. The Corporation is directed to issue strict instructions to the Sanitary hierarchy to ensure proper maintenance of public toilets under the jurisdiction of the Corporation with availability of water and lighting.

The DMA is requested to instruct the Municipalities and Corporations other than Chennai to check up the classification of lands before constructing any public-use structures as to whether they are objectionable category land parcel such as irrigation tank, pond, odai etc. It is also pertinent to remind the urban local bodies that the

Madras High Court in its observations and rulings has pointed out that no structure should be raised on water bodies.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. T.செந்தமிழன்,
கதவு எண்.25, வி.டி.கே.நகர்,
வள்ளிமலை ரோடு, காட்பாடி–7,
வேலூர் மாவட்டம்.

2) ஆணையர்,
வேலூர்மாநகராட்சி,
வேலூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக